# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 17.04.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

திருக்குர்ஆனில் அல்லாஹ் பல்வேறு வசனங்களில் சில கருத்துக்களை விளக்கி, பல்வேறு ரீதியில் இறைவன் தனது அடியான் மீது காட்டுகின்ற அருட்கள் தொடர்பாக கூறியுள்ளான். இதை இறைவன் தனது லதீஃப் என்ற பண்போடு இணைத்துக் கூறியுள்ளான். இது தொடர்பாக பல்வேறு வசனங்களை எடுத்துக் கூறி சில விஷயங்களை நான் கூறுவேன். ஆனால் அதற்கு முன் லதீஃப் என்ற சொல்லின் பொருளை விளக்கி விடுகிறேன். சில அகராதி நூல்களிலும் திருக்குர்ஆன் வசனங்களிலும், பல்வேறு திருக்குர்ஆன் விரிவுரையாளர்களும் இதன் பொருளை விளக்கியுள்ளார்கள்.

அக்ரப் என்று ஒரு அகராதி நூல் உள்ளது. அதில் லதீஃப் என்ற சொல்லுக்கு கருணை காட்டுபவன் என்று பொருள் எழுதப்பட்டுள்ளது. இது இறைவனின் பண்புப் பெயர்களுள் ஒரு பண்புப்பெயர் ஆகும். அல்லாஹ்வுக்காக இந்த சொல் வரும்போது தனது அடியார்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்பவன்; தனது படைப்பினங்களின் பயனை மிருதுவான முறையில் வழங்குபவன்; மிகவும் நுட்பத்திலும் நுட்பமான, மறைவிலும் மறைவான விஷயங்களை அறிந்தவன் என்று பொருள்.

அல்லாமா துர்துபீ இந்த சொல்லுக்கு இவ்வாறு பொருள் எழுதுகின்றார்கள். அதாவது அல்லாஹ் தனது அடியார்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்கிறான் என்பதன் பொருள் அவர்களுக்கு நற்செயல் செய்வதற்கான பாக்கியத்தை வழங்குதல், பாவங்களிலிருந்து விலக்கி வைத்தல், முலாதிஃபத் – அதாவது நல்ல முறையில் பரிமாறுதல், நடந்து கொள்தல் என்பது இதிலிருந்து வந்த சொல்லாகும்.

**ஜுனைத் பக்தாதீ (ரஹ்) அவர்கள் எழுதுகின்றார்கள்:**

உனது உள்ளத்தை நேர்வழியின் ஒளியைக் கொண்டு வெளிச்சம் ஊட்டியவனும், உணவைக் கொண்டு உனது உடலை வளர்த்தவனும், சோதனையின் போது உனக்கு உறுதுணையாக நின்றவனும், லதீஃப் ஆவான். அவன் நீ நெருப்பில் விழும்போது உன்னை பாதுகாக்கிறான். உன்னை தனது பாதுகாப்பான சொர்க்கத்தில் நுழையச் செய்கிறான்.

லதீஃபுன் பில் இபாத் என்றால் கட்டளையிட்டு அதற்கு தகுந்தாற்போல் கணக்கெடுப்பதில் அடியார்கள் மீது மிகவும் எளிமை காட்டுபவன் என்று பொருள். லதீஃப் என்றால் அடியார்களின் நன்மையை எடுத்துரைத்து அவர்களின் குறைகளை திரையிட்டு மறைப்பவன் ஆவான். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்தக் கருத்தை இவ்வாறு எடுத்துரைக்கிறார்கள்.

**யா மன் அழ்ஹரல் ஜமீல வஸதரல் கபிஹ** – அதாவது இறைவன் நல்லவற்றை எடுத்துரைப்பவனும் தீயவற்றை திரையிட்டு மறைப்பவனும் ஆவான்.

அல் லதீஃப் என்றால் குறைவான தியாகத்தையும் ஏற்றுக் கொண்டு அதற்குரிய கூலியை மிகவும் அதிகமாக்கி கொடுப்பவன் ஆவான். இதற்கு இன்னொரு பொருள், எல்லா பணிகளும் சீர்கெட்டு விட்ட பிறகு அவருடைய பணியை சீர்செய்பவன்; ஏழைக்கு செழிப்பை வழங்குபவன். லதீஃப் என்றால் கீழ்படியாதலை பிடிப்பதில் அவசரம் காட்டாதவன். அவனிடம் எதிர்பார்ப்பவர்களை நம்பிக்கை இழக்கவிடமாட்டான்.

லதீஃப் என்ற சொல்லிற்கு சிலர் இவ்வாறு பொருள் கொடுத்துள்ளார்கள். அறிவுடைய மக்களுக்கு தனது இருப்பு பற்றி அறிவிக்க ஒரு ஒளிவிளக்கு ஏற்றி விடுகிறான். நேர்வழியை அவர்களின் வழியாக்கி விடுகிறான். தனது கருணையின் மூலம் அளவற்ற அருள்மழையைப் பொழிகின்றான்.

லதீஃப் அடியார்களோடு நல்லமுறையில் நடந்து கொள்பவன். அவனுடைய அடியார்கள் அறிந்த வழிகளின் மூலம் அவர்களுக்கு அருள்புரிகின்றான். அவர்களின் நன்மைக்கான ஆதாரங்களை அவர்கள் சற்றும் அறியாத இடத்திலிருந்து வழங்குகின்றான்.

விஷயங்களின் நுட்பத்தை நன்கு அறிபவன் லதீஃப் ஆவான் என்று சில உலமாக்கள் பொருள் கொடுத்துள்ளனர். மிகவும் நுட்பமான பார்வையோடு பார்ப்பவன்.

இவ்வனைத்து விஷயங்களின் சுருக்கம் இதுவாகும்.

1) இறைவன் தனது இந்த பண்பின் மூலம் நேர்வழியை வழங்குகின்றான்.

2) லதீஃப் என்ற பண்பின் மூலம் நமது ஆன்மீக, பௌதீக வளர்ச்சிக்கு தேவையானவை அனைத்தையும் வழங்குகின்றான்.

3) இந்த பண்பின் மூலம் சோதனையின் போது நமக்கு உறுதுணையாக இருக்கின்றான்.

4) நரகத்திலிருந்து விலகியிருக்க நமக்கு வழிமுறைகளை கற்பிக்கிறான்.

5) துன்பம் மற்றும் துயரத்தின் போது நம்மை பாதுகாக்கிறான்.

6) லதீஃப் என்ற பண்பின் மூலம் நமது குறைகளை மறைக்கிறான்.

7) இந்த பண்பின் முலம் நமது சிறிய தியாகத்திற்கும் மிக அதிக நற்கூலியை வழங்குகிறான்.

8) லதீஃப் என்ற பண்பின் மூலம் தவறுகளுக்கு தண்டனை வழங்குவதில் அவசரம் காட்டுவதில்லை.

9) இந்த பண்பின் மூலம் மிகவும் நுட்பமான பார்வையால் ஒவ்வொரு விஷயத்தின் ஆழத்தையும் நன்கு பார்ப்பவன்.

இவ்வனைத்தும் அல்லாஹ் திருக்குர்ஆனின் பல்வேறு வசனங்கள் மூலம் எடுத்துரைத்துள்ளான்.

**திருக்குர்ஆனில் சூரா அல் அன்ஆம் 104 வது வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:**

**லா துத்ரிக்ஹுல் அப்ஸாரு வஹுவ யுத்ரிகுல் அப்ஸார். வஹுவல் லதீஃபுல் கபீர்** – பார்வைகளால் அவனை அடைய முடியாது. ஆனால் அவன் பார்வைகளை அடைகிறான். அவன் நுட்பமானவனும், யாவற்றையும் அறிந்தவனுமாவான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

கண்களும், பார்வைகளும் இறைவனின் இருப்பு வரை செல்ல முடியாது. உங்களது அறிவும், பார்வையும் இறைவனை அடைய முடியாது. அதாவது இறைவனை தேடுவதில் அவன் நமக்கு தென்பட வேண்டும் என்று நாம் முயற்சி செய்தால் அது ஒருபோதும் நடக்காத காரியம் ஆகும். ஏனென்றால் அல்லாஹ் லதீஃப் ஆவான். அவன் ஒளி ஆவான். ஆனால் கண்களுக்கு தென்படுவதில்லை. ஆனால் எதன் மீது அந்த ஒளி படுகிறதோ அதை வெளிச்சமாக்கி விடுகிறான். அந்த பொருள் இறைவனின் இருப்பின் அடையாளமாக மாறி விடுகிறது. இந்த ஒளி நபிமார்களுக்கு மிக அதிகமாக கிடைத்தது. எல்லாவற்றிற்கும் மேலாக நமது தலைவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு இந்த ஒளி கிடைத்தது. ஆனால் கண்களால் குருடாக இருந்தவர்கள், பார்வையால் மிகவும் பலவீனமானவர்கள் ஆகியவர்களுக்கு அந்த ஒளி தென்படவில்லை.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடமிருந்து பலன் பெறுவதிலிருந்து அவர்கள் விலகி இருந்தார்கள். மிகப்பெரிய அறிவாளி என்று எண்ணப்பட்டவர்கள், சமுதாயத்தின் தலைவர்கள் ஆகியவர்களுக்கு அந்த ஒளி தென்படவில்லை. ஆனால் மிகவும் ஏழைகளுக்கு அது தென்பட்டு விட்டது. அவர்களின் முயற்சி உண்மையான முயற்சியாக இருந்தது. இறைவனின் ஒளி தம்மை அடைய வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். அவர்களுக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மீது இருந்த இறைவனுடைய ஒளி தென்பட்டது. எனவே இறைவனுடைய ஒளி தென்படுவதற்கு உலக அறிவோ, உலக செல்வாக்கோ, உலக ஆட்சியோ, பதவியோ தேவையில்லை. மாறாக, இறைவன் தனது மிகவும் நுட்பமான பார்வையால் லதீஃப் என்ற பண்பின் மூலம் ஒவ்வொரு உள்ளத்தையும் பார்க்கின்றான். எந்த உள்ளத்தில் இறைவனுடைய ஒளியை பெற வேண்டும் என்று உண்மையிலேயே ஆசையும் விருப்பமும் இருக்கிறது என்று அவனே பார்க்கின்றனர். பிறகு நபிமார்கள் கொண்டு வருகின்ற ஒளியை அவர்களுக்கு இறைவன் காட்டுகிறான். இதன் மூலம் ஆன்மீக முன்னேற்றத்திற்கு வழி கிடைத்து விடுகிறது. உலகரீதியில் அந்த மனிதர் ஒரு பொருட்டே இல்லாதவராக இருந்தாலும் சரியே. விருப்பம் உண்மையாக இருந்தால், இறைவன் தனது பண்பின் வெளிப்பாட்டின் மூலம் மனிதனுடைய நேர்வழிக்கு உதவி செய்து விடுகிறான். அல்லாஹ் தனது நபிமார்களின் மூலம் வெளிப்படுத்துகிறான். நபிமார்கள் அவனது தவ்ஹீதை நிலைநாட்டுவதற்காக வருகிறார்கள். அவர்கள் அல்லாஹ்வின் ஒளியைக் கொண்டு ஏகத்துவத்தின் ஒளியை நாலாபுறமும் பரப்புகின்றனர். மிக அதிகமாக இந்த ஒளி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மூலம் உலகிற்கு கிடைத்தது. இறைவனைப் பற்றிய சரியான ஞானம் (இன்ஸானே காமில்) முழு மனிதர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குத்தான் கிடைத்தது. அவர்களுக்கு கிடைத்த இந்த முழு ஞானத்தின் காரணமாக இறைவனின் பண்புகளை அவர்கள் முழுமையாக பிரதிபலித்தார்கள். இவ்வாறு இறை பண்புகளின் வெளிப்பாடாக அவர்கள் ஆகி விட்டார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கவிதை மூலம் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:**

வானத்திலிருந்து ஒளியைக் கொண்டு வந்த அவர்களும் ஒரு ஒளியாகவே இருந்தார்கள்.

இக்காலக்கட்டத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை நேசரின் அடிமைத்துவத்தின் காரணமாக அந்த ஒளியைக் கொண்டு வெளிச்சமாக்கினான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தங்களைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்கள்.

இன்று இந்த அடியானின் உள்ளத்தில் அந்த ஒளியின் எழுச்சி காணப்படுகிறது. உள்ளத்திற்கு ஒளியை நாம் ஊட்டினோம். ஒளிமிகுந்த ரஸூல் மூலம் நமக்கு கிடைத்த ஒளியில் நம்மை நாமே இணைத்துக் கொண்டோம்.

எனவே இன்று **வஹுாுவ யுத்ரிகல் அப்ஸார்** – அவன் பார்வைகளை வந்தடைகின்றான என்ற இறைவனின் கூற்று, தமது உள்ளங்களை தூய்மையாக்கியவாறு உண்மையான முறையில் அல்லாஹ்வை அடைய விரும்புகின்றவர்களுக்காக தான் பூர்த்தியாகின்றது. அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அடிமையாக வந்த இக்காலத்தின் இமாமை ஏற்றுக்கொள்கின்றனர். பிறகு இறைவன் தனது இருப்பின் அடையாளத்தை ஒவ்வொரு நாளும் புதிய வடிவில் காட்டுகிறான். அதைப் பார்த்து இறை அடியாருக்கு இறைவனுடைய தவ்ஹீதின் மீது முழு நம்பிக்கை ஏற்படுகிறது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுககு கீழ்படிந்ததன் காரணமாக இறை இருப்பு அவர்களுக்கு கிடைத்து விட்டது. இறை இருப்பு அவர்களுக்கு கிடைத்ததன் காரணமாக இறைவனை அடைவதற்கு அவர்கள் ஒரு வழியாக ஆகிவிட்டார்கள். உண்மையான தவ்ஹீதின் அடையாளம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அடிமை ஆவதன் மூலமே கிடைக்கிறது.

இந்த வசனத்திற்கு விளக்கம் கூறும் வண்ணம் ஓரிடத்தில் **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எழுதுகின்றார்கள்:**

இறைவன் மறைவானவற்றிலும் மறைவானவன் ஆவான். நுட்பத்திலும் நுட்பமானவன் ஆவான். அவன் மறைந்திருக்கின்றான். அவன் மிகவும் தொலைவில் இருக்கிறான். எந்த மனித அறிவும் அவனை கண்டுபிடிக்க முடியாது. அல்லாஹ் கூறுகின்றான்:

**லாதுத்ரிஹுல் அப்ஸாரு வஹுவ யுத்ரிகுல் அப்ஸார்** – அதாவது பார்வைகளும் கண்களும் அவனை அடைய முடியாது. அவனோ பார்வையின் எல்லையை நன்கு அறிந்தவன் ஆவான். அவைகளின் மீது அவனது ஆதிக்கம் உள்ளது. எனவே எவரும் அறிவைக் கொண்டு அவனை அடைய முடியாது. மனிதன் பொய்த் தெய்வங்களை விட்டு விலகி, அதாவது மனிதர்களையும், சிலைகளையும், சூரியனையும், சந்திரனையும் வணங்குவதை முற்றிலும் விட்டுவிட வேண்டும். அவ்வாறே அது பொய்த் தெய்வங்களை வணங்குவதையும் விட்டு விலக வேண்டும். அதாவது ஆன்மீக பௌதீக திறமைகளின் மீது நம்பிக்கை வைத்து ஷிர்க்கின் அழிவில் விழுவதிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். எனவே தான் என்ற அகந்தையை விட்டு விலகி ரஸுலின் வழியைப் பின்பற்றுவதை தவிர வேறு வழியில் முழுமையான தவ்ஹீது கிடைக்காது. மனிதன் தனது திறமையை அல்லாஹ்வுக்கு இணையாக்குகின்ற போது அவரை ஒரு தவ்ஹீதுவாதி என்று எவ்வாறு நாம் கூற முடியும்? இறைவனின் ஒளியைப் பெறுவதற்கும், தூய தவ்ஹீதைப் பெறுவதற்கும் முதலில் செய்ய வேண்டியது உள்ளத்தில் நிறைந்து கிடக்கின்ற பொய்த்தெய்வங்களை வெளியேற்ற வேண்டும்.

என்னிடம் செல்வம் இருக்கிறது. நான் சமுதாயத்தின் தலைவர் ஆவேன். முஸ்லிம் ஆவேன். நான் இறைவனை அடைந்து விட்டேன். இனி எனக்கு எதுவும் தேவை இல்லை என்று யாராவது தம்மைப்பற்றி நினைத்தால் இது தவறாகும். எனக்கு மார்க்க அறிவு இருக்கிறது. ஆன்மீகத்தில் என்னை யாரும் மிஞ்ச முடியாது. எனக்குப் பின் எனது சமுதாயம் இருக்கிறது. எனவே எனக்கு இறைவனைப் பற்றிய ஞானம் கிடைத்து விட்டது என்று தம்மைப் பற்றி யாராவது எண்ணினால் இதுவும் தவறாகும்.

ஏனென்றால், இவ்வனைத்திற்கும் பின் ஒரு அகம்பாவம் ஒளிந்திருக்கிறது. அதன் காரணமாக எந்தவொரு செயலும் நல்லெண்ணத்தோடு செய்யப்படுவதில்லை. இறைவனின் பெயரால் நீதியை நிலைநாட்ட முயற்சி செய்தாலும் சரி அல்லது மார்க்கத்தை பரப்புவதற்கு முயற்சி செய்தாலும் சரி. அல்லது மார்க்கத்தை பரப்பிவிட பிரகடனம் செய்தாலும் சரி, அல்லது ஷரீஅத்தை நிலைநாட்ட முயற்சி செய்தாலும் சரி. உள்ளத்தில் தான் என்ற அகந்தை நீங்கவில்லை என்றால் உள்ளத்தை பொய்த் தெய்வங்கள் ஆக்ரமித்துள்ளன. இதன் காரணமாக காலத்தின் இமாமையும் மறுத்து விடுகின்றார்கள். எனவே வழியில் இவ்வாறு பல திரைகள் இறைஒளி நம்மை வந்தடைவதற்கு தடையாக உள்ளன.

அல்லாஹ் கூறுகிறான். அவன் லதீஃப், கபீர் ஆவான். தூய ஒளியாக இருந்து தூய உள்ளத்தில் நுழைகின்றான். அவன் மிகவும் நுட்பமான பார்வையோடு உள்ளத்தின் ஆழம் வரை நுட்பமாக பார்த்து எப்போதும் எல்லாவற்றையும் நன்கு அறிகின்றான். யாருடைய உள்ளத்தில் என்ன இருக்கிறது என்று அவனுக்கு நன்றாக தெரியும். பொய்த்தெய்வங்களால் நிரம்பி இருக்கின்ற உள்ளம், பௌதீக இச்சைகள் கண்கள் ஆகியவற்றில் இறைவனுடைய ஒளி நுழைவதில்லை.

உண்மையான முறையில் **வஹுவ யுத்ரிகுல் அப்ஸார்** – அதாவது அவன் சுயமாகவே பார்வைகளை அடைகின்றான் என்ற அல்லாஹ்வின் கூற்றிலிருந்து பலன்பெற வேண்டும் என்றால் உங்கள் உள்ளங்களை தூய்மையாக வைத்திருங்கள். அல்லாஹ் நமக்கும் இதற்கான நற்பாக்கியத்தை தருவானாக.

**இன்னொரு வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:**

அவர்தம் பெற்றோரைத் தமது அரியணையின் மீது அமர்த்தினார். அவருக்காக அவர்கள் (அனைவரும் இறைவனுக்கு நன்றி செலுத்தியவர்களாக) சிரம்பணிந்து வீழ்ந்தனர். அவர் (யூசுஃப்) இவ்வாறு கூறினார்: என் தந்தையே! இது ஏற்கனவே நான் கண்ட கனவின் விளக்கமே. என் இறைவன் அதனை உண்மையாக்கினான். அவன் என்னைச் சிறையிலிருந்து வெளியேற்றி எனக்கு (மாபெரும்) அருள் செய்துள்ளான். ஷய்த்தான் எனக்கும் என் சகோதரர்களுக்குமிடையில் பிணக்கை ஏற்படுத்தியதன் பின்னர் (எனக்கு மதிப்பிற்குரிய இந்தப் பதவியினை வழங்கிய) அவன் உங்களை நகர்ப்புறத்திலிருந்து (வெளியேற்றி இப்பொழுது என்னிடம்) கொண்டு வந்துள்ளான். என் இறைவன் தான் விரும்புபவரிடம் மென்மையாக(வும் பேருதவியுடனும்) நடந்து கொள்கின்றான். நிச்சயமாக அவனே நன்கு அறிபவனும் நுட்பமான ஞானமுள்ளவனும் ஆவான். (12:101)

இதில் ஹஸ்ரத் யூசுஃப் நபி (அலை) அவர்கள் இறைவனுடைய லதீஃப் என்ற பண்பின் மூலம் அல்லாஹ்வின் அருட்கொடைகளை எடுத்துரைக்கின்றார்கள். அவர்களுடைய தூய உள்ளத்தின் காரணமாக குழந்தைப் பருவத்திலிருந்தே இறைவன் அவர்களுக்கு உண்மையான கனவுகளை காட்டி வந்தான். ஆனால் இன்று அவர்களது குடும்பத்தினர் அனைவரும் ஒன்றுகூடியபோது அவர்கள் சிறிய வயதில் கண்ட கனவு முழுமை அடைந்தது. அவர்களது சகோதரர்கள் கொடுமையிழைத்த போதிலும் அல்லாஹ் அவர்களது சோதனை காலகட்டத்தில் அவர்களுக்கு நண்பனாய் துணை இருந்தான். எல்லா நேரமும் அவர்களை பாதுகாத்தான். பௌதீக ரீதியில் அவர்கள் உயர்ந்த பதவியை அடைந்த இந்த வேளையிலும் அல்லாஹ் தனது லதீஃப் என்ற பண்பைக் கொண்டு அவர்கள் செய்த தியாகங்களுக்கு அளவற்ற அருட்கொடைகளை வழங்கினான்.

ஹஸ்ரத் யூசுஃப் (அலை) அவர்களின் தியாகத்தின் பலன் மட்டும் அவர்களுக்கு கிடைக்கவில்லை. மாறாக, யாகூப் (அலை) அவர்கள் செய்த தியாகத்தின் பலனும் கிடைத்தது. மிக நீண்ட வாழ்க்கையை அவர்களுக்கு அல்லாஹ் கொடுத்திருந்தான். தனது மகனின் உயர்ந்த அந்தஸ்த்தையும் அவர்களுக்கு அல்லாஹ் காட்டினான். அல்லாஹ் தந்தைக்கும் மகனுக்கும் நண்பனாக இருந்தான். ஒவ்வொரு துன்பத்திலிருந்தும் காப்பாற்றினான். பொறுமை, மன உறுதி, தைரியமாக இருத்தல் ஆகிய நன்மைகளை செய்வதற்கான பாக்கியத்தை வழங்கினான். பிறகு இறைவனுடைய நெருக்கத்தைப் பெற்றிருந்த தந்தை மற்றும் மகனின் காரணமாக பிற மகன்கள் சீர்திருந்துவதற்கான வாய்ப்பையும் வழங்கினான். ஒருவர் மற்றவருக்காக துஆவின் மூலம் உதவி செய்திருந்தார்கள் என்னும் கருத்து இதிலிருந்து புலனாகிறது. நெருக்கம் எவ்வளவு அதிகமாக இருக்குமோ அந்த அளவு துஆவும் அதிகமாக இருக்கும். எனவே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது சமுதாயம் சீர்திருத்துவதற்காக மிக அதிக அளவில் துஆ செய்துள்ளார்கள். பிற கோத்திரத்தைப் பற்றி இவர்கள் மிக அதிகமாக எதிர்க்கின்றார்கள் என்று புகார் எழும்போது அவர்கள் எப்போதும் துஆ செய்திருக்கிறார்கள். உம்மத்திற்கும் துஆ செய்வதற்கு வலியுறுத்தியுள்ளார்கள்.

எனவே முஸ்லிம் உம்மத்திற்காக இன்றைய நாட்களில் நாமும் துஆ செய்ய வேண்டும். துஆவின் பக்கம் அதிகம் கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹ் அவர்களது உள்ளங்களை தூய்மை ஆக்குவானாக. இறைவனின் ஒளி இவர்களது பார்வைகளை எட்டுவதற்காக உண்மையை, சத்தியத்தை அடையாளம் கண்டு கொள்ளும் நற்பாக்கியம் வழங்குவானாக.

**சூரா ஹஜ், 64வது வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான்:**

**அலம் தர அன்னல்லாஹ அன்ஸல மினஸ்ஸமாயி மாஅன் ஃபதுஸ்பிஹுல் அர்மு முஹ்லர்ரா. இன்னல்லாஹ லதீஃபுன் கபீர்** - அல்லாஹ் வானத்திலிருந்து நீரை இறக்குவதையும், பூமி பசுமையாகி விடுவதையும் நீர் பார்த்ததில்லையா? நிச்சயமாக அல்லாஹ் கிருபையுடையவனும் நன்கு அறிந்தவனுமாவான். (22:64)

இவ்வசனத்தில் அல்லாஹ் தனது லதீஃப் என்ற பண்பின் மூலம் ஆன்மீக, பௌதீக வாழ்விற்காக தண்ணீர் மிகவும் அவசியம் என்பதை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும் என்று கூறுகிறான். ஆன்மீக வாழ்வை பெறுவதற்காக வல்லமைமிக்க இறைவனிடம் நல்வாய்ப்பை வேண்டுவது அவசியமாகும்.

எவ்வாறு வானத்திலிருந்து பொழிகின்ற தண்ணீர் பூமியை பசுமை ஆக்குகிறதோ அவ்வாறே ஆன்மீக தண்ணீரும் பூமியில் பொழிகின்ற போது மக்கள் ஆன்மீக வாழ்வை பெறுவதற்கு வழிவகுக்கிறது. எனவேதான் இங்கு மழையை உதாரணமாக அல்லாஹ் கூறியுள்ளான். மழை பொழிகின்றபோது பாறைகளும், பாலைவனமும் பசுமை ஆவதில்லை. அதேபோன்று ஆன்மீக மழையும் நன்மை செய்கின்ற தூய உள்ளம் கொண்டவர்களையே பசுமையாக்குகிறது.

இங்கு ஒரு விஷயம் தெளிவாகிறது. அதாவது தண்ணீர் வாழ்க்கையின் ஆதாரமாகும். வானத்திலிருந்து மழை பொழிகின்ற போது பூமி செழிப்பதோடு பறவைகளும், விலங்குகளும், பூச்சிஇனங்களும் இதிலிருந்து பலன் பெறுகின்றன. அது மட்டுமல்ல. இதன் மூலம் அவைகளுக்கு புது வாழ்வும் பிறக்கின்றது. பாறைகள் பசுமை ஆவதில்லை என்று நான் கூறினேன். ஆனால் உயிரினங்கள் வசிக்கின்ற எல்லா இடத்திலும் மழையால் நிச்சயம் பலன் ஏற்படுகிறது. அவ்வாறே நல்ல மக்களின் உள்ளமும் புத்துணர்ச்சியுடன் மரங்கள் புதிய தளிர் விடுவது போன்று, பிறகு அந்த தளிரிலிருந்து கிளைகள் முளைக்கின்றன. அந்த கிளைகளின் பூக்களும், காய் கனிகளும் வெளிப்படுகின்றன. அவ்வாறே ஆன்மீக நீரினால் நல்ல உள்ளங்கள் பயனடைகின்றன. எதிர்ப்பு காட்டுபவர்களும் ஆன்மீக நீர் பொழிகின்றபோது பயனடைகின்றனர். ஒருபுறம் பசுமை மனிதனுக்கு பயன்தருகின்றது. பிற உயிரினங்களும் பலனடைகின்றன. அவ்வாறே ஆன்மீக நீரைக் கொண்டு நல்ல உள்ளம் உடையவர்களும் பயன் அடைகின்றனர். சில கல் நெஞ்சம் கொண்டவர்களுக்கும் பலன் கிடைக்கிறது. ஆனால் இந்த பலன் பௌதீக ரீதியிலான பலனாகத்தான் இருக்கும். நாம் நன்றாக ஆய்வு செய்து பார்த்தால் எங்கெல்லாம் நமது ஜமாஅத் இருக்கிறதோ அங்கெல்லாம் எதிர்ப்பும் அதிகமாக நிலவுகிறது. இதன் மூலம் அரசியல் தேவைக்காகவும், பொருளாதார தேவைக்காகவும் பயன்படுத்துகின்றனர். ஆக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வருகை இம்மக்களின் உணவுத் தேவையை பூர்த்தி செய்து விட்டது. எதிரிகளுக்கு பௌதீக பலன் கிடைக்க ஆரம்பித்து விட்டது. இதை சிலர் வெளிப்படையாக கூறவும் செய்கின்றார்கள். இறைவன் மனித இனம் வாடுவதைப் பார்க்கும் போது வானத்திலிருந்து ஆன்மீக தண்ணீரை இறக்குகிறான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

நான் வானத்திலிருந்து சரியான நேரத்தில் வந்த ஆன்மீக தண்ணீர் ஆவேன்.

கடலும் கரையும் கெட்டு, குழப்பம் பூமி எங்கும் பரவியிருக்கின்ற போது, நபியின் மூலம் ஆன்மீக மழையை இருள் நிறைந்த காலகட்டத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மூலம் முழுமையாக மார்க்கத்தையும் முழுமையான ஷரீஅத்தையும் அல்லாஹ் இறக்கினான். இதன் மூலம் நல்ல ஆன்மாக்களை பசுமையாக்கி செழிக்கச் செய்து விட்டான். அவர்கள் அதிலிருந்து பலன் பெற்றனர். பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கு ஏற்ப ஓராயிரம் ஆண்டு கால நீண்ட இருள் நிறைந்த காலத்தில், உலகெங்கும் குழப்பம் பரவிவிடுகின்ற போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை நேசரை அனுப்பினான். எவ்வாறு முதல் காலங்களில் அல்லாஹ் யுஹ்யில் அர்ழ பஃத மவ்திஹா – பூமி மரணித்த பிறகு உயிர் கொடுத்தான் என்ற காட்சியை காட்டினானோ அதை மீண்டும் காட்டினான். இறை ஒளியைப் பெற வேண்டும் தமது உள்ளத்தில் உண்மையான ஆர்வமும் அதற்காக முயற்சியும் செய்தவர்களின் உள்ளத்தில் இறைவனின் ஒளி நுழைந்தது. இங்கு லதீஃப், கபீர் என்ற சொல்லைப் பயன்படுத்தி அல்லாஹ்வின் மிக நுட்பமான பார்வை உண்மையான தேட்டம் யாருக்கு இருக்கிறது என்பதை நன்கு அறிகிறது என்று கூறுகின்றான்.

**அல்லாஹ் சூரா அஷ்ஷுரூராவின் 20 ஆம் வசனத்தில் இவ்வாறு கூறுகின்றான்:**

**அல்லாஹு லதீஃபும் பி இபாதிஹி யர்ஸுகு மய்யஷாவு வஹுவல் கவிய்யுல் அஸீஸ்** – அல்லாஹ் தன் அடியார்களுக்கு நன்மை செய்கின்றவனாவான். அவன் தான் விரும்புவோருக்கு வாழ்விற்குரியவற்றை வழங்குகின்றான். அவன் ஆற்றல்மிக்கவனும் வல்லவனுமாவான். (42:20)

அல்லாஹ் சூரா அன்ஆமில் அவன் பார்வைகளை வந்தடைகிறான் என்று கூறியதை நான் முதலில் குறிப்பிட்டேன். பிறகு சூரா ஹஜ்ஜில் அல்லாஹ் வானத்திலிருந்து தண்ணீரை இறக்குகிறான். இதன் மூலம் பூமி பசுமை ஆகிறது. (இங்கு) தண்ணீர் என்பது ஆன்மீகத் தண்ணீராகும். இங்கு அல்லாஹ் தனது அடியார்களின் மீது மிகவும் கருணையானவன் என்று கூறுகிறான். அது மட்டுமல்ல. அவன் எல்லாவிதமான ரிஸ்கையும் வழங்குகிறான். ஆனால் பௌதீக ரிஸ்கை மட்டும் நாடாமல் ஆன்மீக ரிஸ்கையும் வேண்டுபவர்கள்தான் லாபத்தை அடைகிறார்கள்.

ஆன்மீக ரிஸ்கைத் தேடுபவர்களுக்கு பௌதீக ரிஸ்க் கிடைக்கத்தான் போகிறது. அது அல்லாஹ்வின் வாக்குறுதியும் ஆகும். அல்லாஹ் கூறுகின்றான்:

**வ யர்ஸுக்ஹு மின் ஹஸ்ஸு லா யஹ்தஸிப்** (65:3) – அவர்கள் சற்றும் எதிர்பாராத இடத்திலிருந்து அவர்களுக்கு அல்லாஹ் ரிஸ்க் வழங்குகிறான்.

இந்த வாக்குறுதியை அல்லாஹ் முஃமின்களுக்கு வழங்குகிறான். முஃமின்களுக்கு பௌதீக ரிஸ்க்கும் கிடைக்கும். அல்லாஹ்வின் ஆன்மீக தண்ணீரை தேடுபவர்களை அல்லாஹ் மிருதுவான முறையை கையாண்டவாறு குற்றங்களை திரையிட்டு மறைந்தவாறு தவறுகளையும், பாவங்களையும் மன்னித்தவாறு தனது ஒளியை அடையாளம் கண்டுகொள்வதற்கு பாக்கியம் வழங்குவான்.

இந்த வசனத்தின் முடிவில் அல்லாஹ் கவிய்யுன் அஸீஸ் என்று கூறி அல்லாஹ் லதீஃபாக இருந்தபோதிலும் அவன் பக்கம் கவனம் செலுத்தவில்லை என்றால் அவன் சக்திவாய்ந்தவன், வல்லமைமிக்கவன் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவனது பிடி மிகவும் கடுமையாக இருக்கும் என்ற கருத்தை வலியுறத்தி உள்ளான்.

இறுதி வெற்றி அல்லாஹ் மற்றும் அவனால் அனுப்பப்பட்டவர்களுக்குத்தான் கிடைக்கும். அல்லாஹ் தனது நபிமார்களுக்கு இந்த வாக்குறுதியை வழங்கியுள்ளான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கும் அல்லாஹ் இந்த வாக்குறுதியை வழங்கியுள்ளான். எதிர்ப்பு ஒருபோதும் இந்த ஒளியை அணைத்து விடாது. அல்லாஹ்வால் அனுப்பப்பட்டவரால் ஏற்படுத்தப்பட்ட ஜமாஅத்தை எவராலும் அழிக்க முடியாது. இதுவும் அல்லாஹ்வின தக்தீர்களுள் (விதிகளுள்) ஒரு தக்தீர் ஆகும். இது மாறாத விதியாகும். அல்லாஹ்வும் அவனது ரஸூலும் நிச்சயம் வெற்றி பெறுவர்.

எனவே அல்லாஹ்வின் லதீஃப் என்ற பண்பிலிருந்து பலன் பெறுவதிலும், வல்லமைமிக்க இறைவனால் உருவாக்கப்பட்ட ஜமாஅத்தை எதிர்த்து அல்லாஹ்வின் அருட்கொடையிலிருந்து விலகிவிடாமல் இருப்பதிலும் தான் உலக மக்களின் வாழ்வு இருக்கிறது.

இன்றைய நாட்களில் பாகிஸ்தானில் பொது(மக்களின்) நிலை மிகவும் மோசமாக உள்ளது. எனவே அவர்களுக்காக துஆ செய்து வாருங்கள் என்று நான் உங்களிடம் கூற விரும்புகிறேன். முழு நாட்டின் நிலையும் மிகவும் மோசமாகிக் கொண்டிருக்கிறது. முழு உலகத்தின் பார்வையும் உலகத்திலேயே மிக அதிகமான தீவிரவாதம் பாகிஸ்தானில் தான் உள்ளது என்பது போல் படுகிறது. மிகவும் மோசமான குழப்ப நிலை முழு நாட்டிலும் பரவியுள்ளது. இந்த குழப்பத்திலிருந்து யாரும் பாதுகாப்பாக இல்லை. அஹ்மதி, அஹ்மதி அல்லாதவர் யாரும் பாதுகாப்பாக இல்லை. ஆனால் அஹ்மதிகள் பாகிஸ்தானின் குடிமக்கள் என்ற

அடிப்படையில் பாதிக்கப்படுகிறார்கள். இன்னும் அஹ்மதிகள் என்ற ரீதியிலும் அஹ்மதிகள் பாதிக்கப்படுகின்றனர். எதிர்ப்பின் ஒரு புதிய எழுச்சி அஹ்மதிய்யத்தை இப்போது தாக்குகிறது. எங்கு, எப்போது வாய்ப்பு கிடைத்தாலும் அஹ்மதிகளுக்கு இழப்பை ஏற்படுத்த முயற்சி செய்யப்படுகிறது. இழப்பு ஏற்படுத்த எந்த வாய்ப்பையும் நழுவ விடுவதில்லை.

கடந்த நாட்களில் 14 வயது குழந்தைகள் 4 பேரை மிகவும் மோசமான பழிசுமத்தி பிடித்துள்ளார்கள். இப்போது வரை அவர்களை ஜாமீனில் கொண்டு வருவதற்கான எந்த முயற்சியும் வெற்றி அடையவில்லை. இவ்வாறு இன்னும் பல அருவருக்கத்தக்க பழியை சுமத்தி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை அஹ்மதிகள் நவூதுபில்லாஹ் அவமதித்து விட்டார்கள் என்று பொய் கூறி பிடிக்கிறார்கள். இது தவிர இன்னும் பல அபாயகரமான சூழ்ச்சி ஜமாஅத்திற்கு எதிராக செய்யப்படுகிறது. இதில் சில இடங்களில் அரசாங்கமும் இணைந்துள்ளது.

கடந்த நாட்களில் (பாகிஸ்தானிலுள்ள) பதுஷாதி பள்ளிவாசலில் கத்மே நுபுவ்வத் மாநாடு நடந்தது. அதில் வெளியுறவுத்துறை அமைச்சரும். மவ்லானா ஃபஸ்லுர் ரஹ்மான் இன்னும் பலர் கலந்து கொண்டார்கள். அதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராக மிகவும் கீழ்த்தரமான வார்த்தைகளை பயன்படுத்தியுள்ளார்கள். ஜமாஅத்திற்கு எதிராக இன்னும் பல திட்டங்களை தீட்டியுள்ளார்கள். அரசும் மவ்லவிகளோடு இணைந்து கொண்டு திட்டங்கள் தீட்டுகிறது. வன்முறையை விரும்புபவர்களும் வழக்கம்போல் சூழ்ச்சிகள் செய்கிறார்கள்.

அஹ்மதிகளின் நிலை பாகிஸ்தானில் மிகவும் மோசமாகிக் கொண்டே செல்கிறது. எனவே மிக அதிகமாக துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதியின் உயிரையும் உடைமைகளையும் பாதுகாப்பானாக. ஒவ்வொரு குழப்பத்திலிருந்தும் காப்பானாக. பாகிஸ்தானின் அஹ்மதிகள் தங்களது நிலைகளைப் பார்த்து முன்பும் துஆ செய்தார்கள். ஆனால் முன்பைவிட அதிகமாக துஆவின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். உலகத்தில் பிற இடங்களில் உள்ள அஹ்மதிகளும் தங்களது பாகிஸ்தான் சகோதரர்களுக்காக துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் எல்லா நேரமும் தனது பாதுகாப்பில் வைப்பானாக.

இவ்வாறே இந்தியாவிலும் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள சில இடங்களில் எதிர்ப்பு எழுகிறது. இந்தோனேஷியாவிலும் அவ்வப்போது எதிர்ப்பு தீவிரமடைகிறது. இவ்விரு நாடுகளிலும் தேத்ரதல் நடைபெற்று வருகிறது. அல்லாஹ்விடம் நீதியை நிலைநாட்டுகின்ற, குடிமக்களின் உரிமையைப் பாதுகாக்கின்ற அரசு ஆட்சிக்கு வருவதற்கு துஆ செய்யுங்கள். இவ்வாறே கிரிகிஸ்தான் இது Rusian States ஆக இருந்தது. இதிலும் சில அரசுத் துறைகள் அரசு மவ்லவிகளின் தூண்டுதலால் அஹ்மதிகளுக்கு தொல்லை கொடுத்து வருகிறார்கள். இதற்காக திட்டமிட்டு அமைப்பு ரீதியாக செயல்படுகிறார்கள். அவர்களுக்காகவும் மிக அதிகமாக துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் தனது அருளை ஒவ்வொரு அஹ்மதியின் மீதும் இறக்குவானாக. அல்லாஹ்வின் லதீஃப் என்ற பண்பின் எல்லா பலன்களும் அவர்களுக்கு கிடைக்கட்டுமாக. அஹ்மதிகள் குறிப்பாக துஆவின் பக்கம் கவனம் செலுத்துங்கள். அல்லாஹ் எல்லாரையும் பாதுகாப்பானாக.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 17.04.2009

Translated by : Maulavi S. ABDUL QADIR
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456